(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

இல. **26.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2024 யூன் 04 செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ ஜீவன் தொண்டமான்,** நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** கைத்தொழில் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி,** வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். யூ. எம். அலி சப்ரி,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **டி.வீ. சானக,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

கௌரவ **அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **பிரமித்த பண்டார தென்னகோன்,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **பியல் நிசாந்த த சில்வா,** கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

கௌரவ **அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

கௌரவ **தாரக்க பாலசூரிய,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

கௌரவ **லொஹான் ரத்வத்தே,** பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **(கலாநிதி) சுரேன் ராகவன்,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசனம் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **தேனுக விதானகமகே,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **செஹான் சேமசிங்க,** நிதி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **இந்திக அனுருத்த ஹேரத்,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ தவராஜா கலை அரசன்**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ திஸகுட்டி ஆரச்சி**

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ வேலு குமார்

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ வீரசேன கமகே

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ சு. நோகராதலிங்கம்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ ஜகத் பிரியங்கர

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ எஸ்.சீ. முதுகுமாரண

கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ நிபுண ரணவக

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ எம். ராமேஷ்வரன்

**கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்**

**கௌரவ நிமல் லான்சா**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ காமினி வலேபொட**

**கௌரவ நயன வாசலதிலக**

**கௌரவ இரான் விக்கிரமரத்ன**

**கௌரவ க.வி. விக்னேஸ்வரன்**

**கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன**

**கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான**

**கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண**

**கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர**

**கௌரவ திலிப் வெதஆரச்சி**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ ஜகத் சமரவிக்ரம**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ ஏ.எச்.எம். பௌஸி**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சனாதிபதியின் செய்திகள்:** சனாதிபதியிடமிருந்து கிடைத்த பின்வரும் செய்திகளைச் சபாநாயகர் வாசித்தார்:—

**I**

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
**President of Sri Lanka**

எனது இல: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/4/4/2

2024 மே மாதம் 21 ஆந் திகதி

மாண்புமிகு மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்கள்
சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே,

(358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டம்

(358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு தேசிய நலன்கருதி அவசியமானதெனக் கருதுவதனால், கடற்படைசாராக் கடமையொன்றாக, 2024 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, தேசிய நீரளவைச் சட்டத்தின் 6. (1) (அ) (v) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தேசிய நீரளவைசார் பேரவையின் பதவிவழியுறுப்பினரொருவராகத் தேசிய நீரளவைசார் அலுவலகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் இலங்கைக் கடற்படை ஏவுநருக்கு இத்தால் ஆணையிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவுக்கமைய அதனை இத்தால் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கின்றேன்.

இப்படிக்கு - அன்புள்ள

ரணில் விக்கிரமசிங்க
சனாதிபதி

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka

II

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
**President of Sri Lanka**

எனது இல: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/4/5/1

2024 மே மாதம் 22 ஆந் திகதி

**மாண்புமிகு மஹிந்த யாப்பா அபேவர்த்தன அவர்கள்**
சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, மக்களிடையே அமைதியைப் பேணுவதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, முதலாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்படும் ஆயுதந்தாங்கிய படையின் சகல உறுப்பினர்களும் அதன் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்பட்ட பிரதேசங்களில் மக்களிடையே அமைதியைப் பேணுவதற்காக அழைக்கப்படுகின்றனர் என ஆணையிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மேற்படி கட்டளைச் சட்டத்தின் 21(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(3) பிரிவுக்கமைய அதனை இத்தால் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கின்றேன்.

இங்ஙனம் - அன்புள்ள

ரணில் விக்கிரமசிங்க
சனாதிபதி

**2. சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

**I**

“அரசியலமைப்பின் 121(1) உறுப்புரையின் பிரகாரம், உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட "இலங்கை மின்சாரம்" என்ற சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்.

குறித்த தீர்ப்புக்கு அமைய, உயர் நீதிமன்றம் சட்டமூலத்தின் சட்டவாக்க நிலை பின்வருமாறு சாராம்சப்படுத்தப்பட்டுள்ளது:-

முழுமையாக நோக்கும்போது குறித்த சட்டமூலம் அரசியலமைப்பின் 12(1) உறுப்புரைக்கு ஏற்புடையதாகாது என்பதுடன் அரசியலமைப்பின் 84(2) உறுப்புரைக்கு அமைய பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும். அவ்வாறெனினும் சட்டமூலத்தின் 1(2) மற்றும் 1(3) பிரிவுகள் தொடர்பில் உயர் நீதிமன்ற தீர்ப்பின் சாராம்சத்தில் உத்தேச திருத்தங்கள் செய்யப்படுமாயின் குறித்த ஏற்புடையாமைகள் நீங்கும்.

3(6)(அ) பிரிவு மற்றும் 10(1)(இ) பிரிவு அரசியலமைப்பின் 12(1) உறுப்புரைக்கு ஏற்புடையதாகாது என்பதுடன் அரசியலமைப்பின் 84(2) உறுப்புரைக்கு அமைய பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும். எனினும் அப் பிரிவுகள் தொடர்பில் உயர் நீதிமன்ற தீர்ப்பின் சாராம்சத்தில் உத்தேச திருத்தங்கள் செய்யப்படுமாயின் குறித்த ஏற்புடையாமைகள் நீங்கும்.

11(1) பிரிவின் முதலாவது விதிவிலக்கு அரசியலமைப்பின் 12(1) உறுப்புரைக்கு ஏற்ப ஏற்புடையதாகாது என்பதுடன் அரசியலமைப்பின் 84(2) உறுப்புரைக்கு அமைய பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும். எனினும் அப் பிரிவு தொடர்பில் உயர் நீதிமன்ற தீர்ப்பின் சாராம்சத்தில் உத்தேச திருத்தங்கள் செய்யப்படுமாயின் குறித்த ஏற்புடையாமைகள் நீங்கும்.

17 பிரிவு அரசியலமைப்பின் 12(1) உறுப்புரைக்கு ஏற்ப ஏற்புடையதாகாது என்பதுடன் அரசியலமைப்பின் 84(2) உறுப்புரைக்கு அமைய பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும். எனினும் அப் பிரிவு தொடர்பில் உயர் நீதிமன்ற தீர்ப்பின் சாராம்சத்தில் உத்தேச திருத்தங்கள் செய்யப்படுமாயின் குறித்த ஏற்புடையாமைகள் நீங்குவதுடன் சாதாரண பெரும்பான்மை வாக்குகளால் அப்பிரிவை நிறைவேற்ற முடியும்.

18(3)(உ)(ii ) பிரிவு அரசியலமைப்பின் 12(1) உறுப்புரைக்கு ஏற்புடையதாகாது என்பதுடன் அரசியலமைப்பின் 84(2) உறுப்புரைக்கு அமைய பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும். எனினும் அப் பிரிவு தொடர்பில் உயர் நீதிமன்ற தீர்ப்பின் சாராம்சத்தில் உத்தேச திருத்தங்கள் செய்யப்படுமாயின் குறித்த ஏற்புடையாமைகள் நீங்கும்.

18(3)(ஊ) பிரிவு அரசியலமைப்பின் 12(1) உறுப்புரை மற்றும் 14(1)(எ)உறுப்புரைக்கு ஏற்புடையதாகாது என்பதுடன் அரசியலமைப்பின் 84(2) உறுப்புரைக்கு அமைய பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும். எனினும் அப் பிரிவு தொடர்பில் உயர் நீதிமன்ற தீர்ப்பின் சாராம்சத்தில் உத்தேச திருத்தங்கள் செய்யப்படுமாயின் குறித்த ஏற்புடையாமைகள் நீங்கும்.

18(5)(ஆ)(ii) பிரிவு அரசியலமைப்பின் 12(1) உறுப்புரைக்கு ஏற்புடையதாகாது என்பதுடன் அரசியலமைப்பின் 84(2) உறுப்புரைக்கு அமைய பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும். எனினும் அப் பிரிவு தொடர்பில் உயர் நீதிமன்ற தீர்ப்பின் சாராம்சத்தில் உத்தேச திருத்தங்கள் செய்யப்படுமாயின் குறித்த ஏற்புடையாமைகள் நீங்கும்.

21 பிரிவு மற்றும் 23 பிரிவு அரசியலமைப்பின் 12(1) உறுப்புரைக்கு ஏற்புடையதாகாது என்பதுடன் அரசியலமைப்பின் 84(2) உறுப்புரைக்கு அமைய பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும். எனினும் அப் பிரிவு தொடர்பில் உயர் நீதிமன்ற தீர்ப்பின் சாராம்சத்தில் உத்தேச திருத்தங்கள் செய்யப்படுமாயின் குறித்த ஏற்புடையாமைகள் நீங்கும்.

38 (2) பிரிவு அரசியலமைப்பின் 12(1) உறுப்புரைக்கு ஏற்புடையதாகாது என்பதுடன் அரசியலமைப்பின் 84(2) உறுப்புரைக்கு அமைய பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும். எனினும் அப் பிரிவு தொடர்பில் உயர் நீதிமன்ற தீர்ப்பின் சாராம்சத்தில் உத்தேச திருத்தங்கள் செய்யப்படுமாயின் குறித்த ஏற்புடையாமைகள் நீங்கும்.

48 பிரிவு அரசியலமைப்பின் 3 மற்றும் 76 உறுப்புரைகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 4(அ) உறுப்புரைக்கு ஏற்புடையதாகாது என்பதுடன் விசேட மேலதிக வாக்குகளால் மற்றும் மக்கள் கருத்துக்கணிப்பில் அது மக்களால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

53 பிரிவில் "தேசிய கட்டம்" என்ற சொல்லுக்கு வழங்கப்பட்டுள்ள விளக்கம் அரசியலமைப்பின் 12(1) உறுப்புரைக்கு ஏற்புடையதாகாது என்பதுடன் அரசியலமைப்பின் 84(2) உறுப்புரைக்கு அமைய பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மைவாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும். எனினும் அப் பிரிவு தொடர்பில் உயர் நீதிமன்ற தீர்ப்பின் சாராம்சத்தில் உத்தேச திருத்தங்கள் செய்யப்படுமாயின் குறித்த ஏற்புடையாமைகள் நீங்கும்.

இன்றைய தின கூட்டக் குறிப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ அறிக்கையில் உயர் நீதிமன்றத் தீர்மானம் அச்சிடப்பட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்."

**II**

''அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'இலங்கைத் தொலைத்தொடர்பு (திருத்தம்)' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு 2024.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மூன்று மனுக்களின் பிரதிகளும், 2024.05.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவொன்றின் பிரதியும் மற்றும் 2024.05.28 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட மனுவொன்றின் பிரதியும் எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்.''

**III**

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'பொருளாதார நிலைமாற்றம்' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து மனுக்களின் பிரதிகள் எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்."

**IV**

"பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க அவர்கள் 2024 ஏப்ரல் 24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை பற்றிய விடயம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும்."

**V**

"பாராளுமன்ற நிலையியற் கட்டளை 112 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் 2024 பெப்ரவரி 09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றிற்கு அமைவாக, பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் பணியாற்றுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ முஜிபுர் ரஹுமான் அவர்களும் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்."

**VI**

“பாராளுமன்ற நிலையியற் கட்டளை 112 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் 2024 பெப்ரவரி 09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றிற்கு அமைவாக, வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் பணியாற்றுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ முஜிபுர் ரஹுமான் அவர்களும் தெரிவுக் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.”

**VII**

“பாராளுமன்ற நிலையியற் கட்டளை 123 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் 2024 பெப்ரவரி 09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றிற்கு அமைவாக, பொருளாதார உறுதிப்படுத்தல் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ முஜிபுர் ரஹுமான் அவர்களும் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.”

**VIII**

“பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சமிந்த விஜேசிறி அவர்கள் இராஜினாமா செய்தமையின் காரணமாக வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ வேலு குமார் அவர்கள் அக்குழுவில் பணியாற்றுவதற்காக பாராளுமன்ற நிலையியற் கட்டளை 130(3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2024 மே 28 ஆம் திகதி தெரிவுக்குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார் என்பதை அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.”

**IX**

“பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ உத்திக பிரேமரத்ன அவர்கள் இராஜினாமா செய்தமையின் காரணமாக சிறுவர்கள், பெண்கள் மற்றும் பாலினம் பற்றிய துறைசார் மேற்பார்வை குழுவில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஜகத் பிரியங்கர அவர்கள் அக்குழுவில் பணியாற்றுவதற்காக பாராளுமன்ற நிலையியற் கட்டளை 130(3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2024 மே 28 ஆம் திகதி தெரிவுக்குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார் என்பதை அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.”

**X**

“பாராளுமன்ற நிலையியற் கட்டளை 143 இன் பிரகாரம் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரில் சேவையாற்றுவதற்காக தவிசாளர் குழாத்தில் தற்போது பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மேலதிகமாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய அவர்களும் என்னால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார் என்பதை பாராளுமன்றத்திற்கு அறியத்தருகின்றேன்.”

**XI**

“பாராளுமன்ற நிலையியற் கட்டளை 126 (1) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அரசியலமைப்பு அலுவல்கள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக சபாநாயகரைத் தவிசாளராகவும் மற்றும் பிரதம அமைச்சர், பாராளுமன்றச் சபை முதல்வர், பாராளுமன்ற எதிர்க் கட்சித் தலைவர் உட்பட பின்வரும் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் என்னால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்:—

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ எம். ஏ. சுமந்திரன்”

3. **பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் —

(i) 2020 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் LVII ஆம் பகுதியையும்;

(ii) 2021 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் LIII பகுதியையும் மற்றும் மூன்றாவது தொகுதியின் XXII ஆம் பகுதியையும்; மற்றும்

(iii) 2022 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XLIX பகுதியையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) கல்வி அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) கல்வி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான அமைச்சரவை அலுவலகத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) கல்வி அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) கல்வி அமைச்சர், 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் நலன்புரி நன்மைகள் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2024 மே 17 ஆம் திகதிய 2384/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அஸ்வெசும நலன்புரி நன்மை வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தினைச் சமர்ப்பித்து இந்நலன்புரி நன்மை வழங்கல் நிகழ்ச்சித்திட்டம் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) கல்வி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்றச் சபை முதல்வரின் அலுவலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) கல்வி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்றத்தின் அரசாங்கக்கட்சி முதற்கோலாசான் அலுவலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) கல்வி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான கடற்றொழில் அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) கல்வி அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) கல்வி அமைச்சர், 2020/2021 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11) கல்வி அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(12) கல்வி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(13) கல்வி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(14) கல்வி அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) மின்சக்தி மற்றும் வலுசக்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ கஞ்சன விஜேசேகர அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 4(அ) மற்றும் 16(4) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 48 ஆம் பிரிவின் கீழ் மற்றும் 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 13(3)ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 48 ஆம் பிரிவின் கீழ் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2024 மார்ச் 05 ஆம் திகதிய 2374/17 இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பிலான குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) சிறுவர்கள், பெண்கள் மற்றும் பாலினம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ சட்டத்தரணி (திருமதி) தலதா அதுகோரல அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, பெண்களின் வலுவூட்டல் சட்டமூலம் தொடர்பிலான குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால தேசிய கொள்கைகளை வகுப்பதில் முன்னுரிமைகளை அடையாளம் காணல் பற்றிய தேசிய பேரவை உப குழுவின் தவிசாளர், கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால தேசிய கொள்கைகளை வகுப்பதில் முன்னுரிமைகளை அடையாளம் காணல் பற்றிய ஒன்பதாவது பாராளுமன்றத்தின் தேசிய பேரவையின் உப குழுவினால் உணவுப் பாதுகாப்பிற்கான கருத்தியல் கொள்கை கட்டமைப்பு பற்றிய அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(4) அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டமூலம்;

(ii) 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளை; மற்றும்

(iii) 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்

தொடர்பிலான குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**5. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) (i) ஹங்குரன்கெத்த, பேரவங்குவ "சாந்த" எனும் முகவரியில் வதியும் திரு. கே.டி.பீ. பஸ்நாயக்கவினது 2024.05.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) உடஹிகுல்வல, இல. 102/1 இல் வதியும் திரு. எஸ்.எம்.ஏ.கே. மொலகொடவினது 2024.04.17 திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ சமர்ப்பித்தார்.

(2) நாகொல்லாகொட, எஹெட்டுமுல்ல, இல. 316/1 இல் வதியும் திரு. எஸ்.எம். மிஸாரினது 2024.03.22 திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சமன்பிரிய ஹேரத் சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**6. சட்டமூலம் கொண்டுவர அனுமதி:** "2007 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை கணிய அளவையாளர்களின் நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி பிரேரித்தார். கௌரவ கயந்த கருணாதிலக்க அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

52 (6) ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**7. பெண்களின் வலுவூட்டல் சட்டமூலம் :** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டுகை சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

(பி.ப.12.29 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப.1.30 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன தலைமை தாங்குவாராக” என வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.20 மணிக்கு கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன தலைமை தாங்கினார்.)

“விவாதம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக” என மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதிலிருந்து விவாதம் பிறிதொரு தினத்தில் நடைபெறும்.

**8. இலங்கை பட்டயக் கப்பல் தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம்:** பரிசீலனைக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

சட்டமூலம் சட்டவாக்க நிலையியற் குழுவில் செய்யப்பட்ட திருத்தங்களுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

“சட்டவாக்க நிலையியற் குழுவில் செய்யப்பட்ட திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமாக” என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“திருத்தப்பட்டவாறான சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**9. தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவ (கூட்டிணைத்தல்) சட்டமூலம்:** பரிசீலனைக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

சட்டமூலம் சட்டவாக்க நிலையியற் குழுவில் செய்யப்பட்ட திருத்தங்களுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

“சட்டவாக்க நிலையியற் குழுவில் செய்யப்பட்ட திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமாக” என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"திருத்தப்பட்டவாறான சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**10. ஒத்திவைப்பு (பாடசாலை விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களைக் கல்விசார் பணியாட்டொகுதிக்குள் உள்ளீர்த்தல்):** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" எனப் பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 5.04 மணிக்கு பாராளுமன்றம் 2024 யூன் 05 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணிவரை சபைக்குத் தலைமை தாங்கும் உறுப்பினரால் ஒத்திவைக்கப்பட்டது.